
# திராவிடத்தால் வாழ்கிறோம்

990

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்


# கழகம் கண்ட சட்டப் போராட்டங்கள்

தமிழ்.கா.அமுதரசன்

26

# முதலமைச்சர் வாக்குறுதி, சமூக நீதியின் காப்புறுதி!

ஓவியம் : ரவி பேலட்




**கழகம் நடத்திய உயிர்ப்புமிக்க சட்டப் போராட்டங்களை உணர்வு பூர்வமாக விவரிக்கும் தொடர்!**

*2025 அக்டோபர் 2, தமிழ்நாடு அரசின் செய்திக் குறிப்பு எண்: 2342 ஒரு அறிவிப்பினை வெளியிட்டது. 'ஒன்றிய அரசால் நிதி விடுவிக்கப்பட்டதைத் தொடர்ந்து 2025-26 கல்வியாண்டிற்கான கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் -2009-ன் படி (RTE) மாணவர் சேர்க்கை தொடங்கப்படுவதாக, அந்த அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டது.*

*குறிப்பாக அந்த அரசாணையில், மாண்பமை சென்னை உயர் நீதிமன்றத்தின் உத்தரவுகள் மற்றும் உச்ச நீதிமன்ற நடவடிக்கைகளின் அடிப்படையில், ஒன்றிய அரசால் மாநிலத்திற்கு வழங்க வேண்டிய 'கட்டாயக் கல்வி உரிமை (RTE) நிதி' விடுவிக்கப்பட்டதைத் தொடர்ந்து இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் அறிவித்தது. தவிர, வழக்கின் பின்னணியையும் விரிவாக விளக்கியது.*

### வழக்கின் பின்னணி

*W.P. No. 18427 of 2025 V. Eswaran vs. Government of Tamil Nadu & Others வழக்கில், மாண்பமை சென்னை உயர் நீதிமன்றம், கட்டாயக் கல்வி உரிமை (RTE) நிதி ஒதுக்கீட்டை, ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி (SAMAGRA SHIKSHA) திட்டத்திலிருந்து பிரித்து வழங்க, ஒன்றிய அரசுக்கு உத்தரவிட்டது. மேலும், தேசிய கல்விக் கொள்கை-2020 PM SHRI (MOU) என்பனவற்றுடன் நிதி வழங்கல் இணைக்கப்படக் கூடாது என்றும் தெரிவித்தது.*

*இதனைத் தொடர்ந்து தமிழ்நாடு அரசு, உச்ச நீதிமன்றத்தில் சிறப்பு மேல்முறையீடு மனு (SLP) தாக்கல் செய்தது. உச்ச நீதிமன்றம் ஒன்றிய அரசுக்கு அறிவிப்பு வழங்கியதைத் தொடர்ந்து, ஒன்றிய அரசு தன்னுடைய நிதிப் பங்களிப்பை விடுவித்துள்ளது. இதன் தொடர்ச்சியாக, 2025-26 கல்வியாண்டிற்கான கட்டாயக் கல்வி உரிமை (RTE) மாணவர் சேர்க்கை நடைமுறைகள் தொடங்கப்பட்டுள்ளன என்றது.*

### உயர் நீதிமன்றம் அளித்த தீர்ப்பு

*கட்டாயக் கல்வி உரிமை நிதியை விடுவிப்பதில், நான்கு ஆண்டுகளாக ஒன்றிய அரசு குழப்பங்களை உருவாக்கி வந்த நிலையில்தான், சென்னை உயர் நீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு வழக்கு தாக்கல் செய்தது.*

*அந்த வழக்கில், ஒன்றிய அரசின் சார்பில் அளிக்கப்பட்ட பதில் மனுவில், 'புதிய கல்விக் கொள்கை தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் தமிழக அரசு கையெழுத்திட மறுத்துவிட்டதால், இந்தத் தொகையை விடுவிக்கவில்லை' என்று குறிப்பிட்டனர்.*

*வழக்கை விசாரித்த நீதிபதிகள், "கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் தனித்துவமானது. அனைத்துத் தரப்பு மக்களுக்கும் தரமான கல்வி கிடைக்க வேண்டும் என்பதற்காகவே, கொண்டுவரப் பட்டுள்ளது. இந்தச் சட்டத்தின் பிரிவு-7இன் படி, இதை நிறைவேற்றும் பொறுப்பு, இரு அரசுகளுக்கும் உள்ளது"என்று தெரிவித்தனர். குறிப்பாக, கட்டாயக் கல்வி உரிமைச் சட்டத்தையும் புதிய கல்விக் கொள்கையையும் இணைத்துப் பார்க்கத் தேவையில்லை என்று ஒன்றிய அரசுக்கு அறிவுறுத்திய நீதிபதிகள், தமிழ்நாட்டிற்கான கட்டாயக் கல்வி உரிமைச் சட்ட நிதியை வழங்க, ஒன்றிய அரசு பரிசீலிக்க வேண்டும்" என்றும் தீர்ப்பு வழங்கினர்.*

*"கடந்த கல்வி ஆண்டுக்கு (2024-2025) சமக்ர சிக்ஷா அபியான் திட்டத்தைத் தமிழகத்தில் செயல்படுத்த, மொத்தத்தில் ஒதுக்கப்பட வேண்டிய ரூ.3585.99 கோடியில், மத்திய அரசின் பங்களிப்பு ரூ.2,151.59 கோடி என்று குறிப்பிட்ட நீதிபதிகள், இதில் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டத்தில் தமிழக அரசுக்கு வழங்க வேண்டிய ரூ.200 கோடியை வழங்குவதில், மத்திய அரசுக்கு எந்தவிதத் தடங்கலும் இல்லை என்று கூறியுள்ளனர்.*

*அது மட்டுமின்றி, 'ஒன்றிய அரசின் நிதி கிடைக்கவில்லை' என்று காரணம் கூறி, தனியார் பள்ளிகளுக்கு இந்தத் திட்டத்தின் கீழ் வழங்க வேண்டிய நிதியை, தமிழக அரசு மறுக்கக் கூடாது, அதற்குரிய சட்டபூர்வமான கடமையில் இருந்து விலகக் கூடாது" என்றும் நீதிபதிகள் கூறியுள்ளனர்.*

### நிதிகள் இணைக்கப்படக் கூடாது

*கட்டாயக் கல்வி உரிமை நிதி ஒதுக்கீட்டை, ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி (Samagra Shiksha) திட்டத்திலிருந்து பிரித்து வழங்கவும், தேசிய கல்விக் கொள்கை 2020 (NEP-2020) அல்லது PM SHRI பள்ளித் திட்ட ஒப்பந்தம் (MOU) என்பனவற்றுடன் நிதி வழங்கல் இணைக்கப்படக் கூடாது என்றும் நீதிமன்றம் தெளிவான உத்தரவை அளித்தது.*

*இதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு அரசு உச்ச நீதிமன்றத்தில் சிறப்பு மேல்முறையீடு மனு (SLP) தாக்கல் செய்தது. உச்ச நீதிமன்றம் ஒன்றிய அரசுக்கு அறிவிப்பு வழங்கியதைத் தொடர்ந்து, ஒன்றிய அரசு தன்னுடைய நிதிப் பங்களிப்பை விடுவித்துள்ளது. இதன் தொடர்ச்சியாக, 2025-26 கல்வி ஆண்டிற்கான RTE மாணவர் சேர்க்கை நடைமுறைகள் தொடங்கப்பட்டுள்ளன. உச்ச நீதிமன்றம் வழிகாட்டுதல் வழங்கிய பின்னர்தான் ஒன்றிய அரசு நிதியை விடுவித் துள்ளது. ஆனால், உயர் நீதிமன்றம் மாநில அரசுக்கும் கடமை உள்ளது எனக் குறிப்பிடு வதற்கு முன்பிருந்தே, 'கடமை'யை நிறைவேற்றி வருகிறது கழக அரசு. 'ஒன்றிய அரசின் நடவடிக்கையால் 10 ஆயிரம் கோடி ரூபாயை இழந்தாலும், கொள்கைக்காக அதை ஏற்றுக்கொள்வோம்' என நம் முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் அளித்த வாக்குறுதி, சமூக நீதியின் காப்புறுதி!*

...தொடரும்

### 2025-26 கல்வியாண்டிற்காக கட்டாயக் கல்வி உரிமைச் சேர்க்கை நடைமுறைகள்:

**1. சேர்க்கை ஒதுக்கீடு**

அனைத்து சிறுபான்மை அல்லாத தனியார் பள்ளிகளின் நுழைவு.

வகுப்புகளில் (LKG Istd) 25% ஒதுக்கீடு.

சேர்க்கை நடைமுறைகள் RTE Act-2009 மற்றும் தமிழ்நாடு RTE விதிகள். 2011அடிப்படையில் நடைபெறும்.

**2. சேர்க்கை முறை**

அதிகாரபூர்வ இணையதளம் வழியாக, ஆன்லைன் சேர்க்கை.

தற்போது குழந்தைகள் நுழைவுநிலை, வகுப்பில் கல்வி பயிலும் அதே பள்ளியில் இந்தக் கல்வியாண்டிற்கான சேர்க்கை மேற்கொள்ளப்படும்.

ஏற்கெனவே, சேர்க்கப்பட்ட தகுதியான மாணவர்களை RTE ஒதுக்கீட்டின் கீழ் பதிவு செய்வதற்காக, 10 நாள் கால அட்டவணை அறிவிக்கப்பட்டுள்ளது.

**3. முன்னுரிமைப் பிரிவுகள்**

ஆதரவற்றோர், எச்.ஐ.வி. பாதிக்கப்பட்டோர், மாற்றுப் பாலினத்தவர், தூய்மைப் பணியாளர்களின் குழந்தைகள், மாற்றுத் திறனாளிகள் ஆகியோருக்கு முன்னுரிமை.

ஒதுக்கீட்டை விட விண்ணப்பங்கள் அதிகமானால், குலுக்கல் நடைமுறை (Random Selection) பின்பற்றப்படும்.

4. வசூலித்த கட்டணத்தைத் திருப்பிச் செலுத்துதல்.

> **'ஒன்றிய அரசின் நடவடிக்கையால் 10 ஆயிரம் கோடி ரூபாயை இழந்தாலும், கொள்கைக்காக அதை ஏற்றுக்கொள்வோம்' என நம் முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் அளித்த வாக்குறுதி, சமூக நீதியின் காப்புறுதி!**

## திராவிடத்தின் விதை வீரியம் குறையாது!

'திராவிடத்தின் விதை இன்னும் எத்தனை ஆண்டுகளானாலும் அதன் வீரியம் மாறாது' என ராஜராஜேந்திரன் என்பவர் எழுதிய முகநூல் பதிவு, பலராலும் பகிரப்பட்டு வருகிறது. பதிவிலிருந்து...

"ஒரு தலைவன் புகழ்பெற அவனுக்கு, நிகரான சீடர்கள் தேவை. ஒரு பேரரசன் நிலைத்து நிற்க, அவன் பேரரசு குலைந்துவிடாமலிருக்க அவனுக்கு நம்பிக்கையான தளகர்த்தர்கள் தேவை!

பெரியாருக்கு அப்படி அமைந்தது. அண்ணாவுக்கும் அது வாய்த்தது! சினிமா மூலம் அனைத்து தமிழ் மக்களிடையேயும் தி.மு.க. பரவியபின், நாங்கள்தான் நாட்டை ஆள வந்தவர்களென அண்ணா முழங்கவில்லை, அனைத்து தொகுதிகளிலும் வேட்பாளர்களை நிறுத்தவுமில்லை!

இரண்டாவது பொதுத் தேர்தலிலேயே தி.மு.க.எதிர்க்கட்சித் தகுதியைப் பெறுகின்ற அளவு வளமாகிவிட்டது. அதன் பின்னர், அது தமிழ்நாடு முழுக்க பெரிதாகப் பரவியவுடன்தான், "இனி ஆட்சி யமைப்போம்" என்றே அண்ணா உறுதியானார். வெறுங்கையால் முழம் போடாமல், மற்றவர்கள் வெறும் சொல்லால் 'தமிழ்நாடு' எனச் சொல்லிக் கொண்டு நாடகமாட, ஊர் உலகையே அப்படி அதிகாரபூர்வமாகச் சொல்லச் செய்தார் அண்ணா.

பார்ப்பனர்கள் மந்திரம் மொழிய தாலி கட்டி, அம்மி மிதித்து, அருந்ததி பார்த்து செய்யும் திருமணங்கள் மட்டுமே செல்லும் என்கிற நீதிமன்ற உத்தரவைப் பொடிப் பொடியாக்கி, சுயமரியாதைத் திருமணங்களை சட்டப்பூர்வமாக்கினார் அண்ணா!

"இருமொழிக் கொள்கை இனி இங்கு இல்லை" என சொல்லும் துணிவு தமிழ்நாட்டில் எவருக்கும் வராது. தமிழ் - ஆங்கிலம் இரண்டு மொழிகள் மட்டுமே என்று அதையும் சட்டமாக்கினார் அண்ணா. அண்ணாவின் வழித்தோன்றலான மு.க.ஸ்டாலின் இன்னும் கொஞ்சம் மேலே போய், இந்தியாவின் பிற மாநில அரசுகள், மக்களிடையேயும் இந்த இருமொழிக் கொள்கையைப் பரவச் செய்துவிட்டார்.

அண்ணா ஆறடி பாய்ந்தார் என்றால் கலைஞர் ஆறாயிரம் அடி பாய்ந்தார். முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறுபதினாயிரம் அடி பாய்ந்தோடிக் கொண்டிருக்கிறார். இன்னும் நூறு ஆண்டுகளுக்கு இதே வீரியமாக திராவிடம் வாழும்" என்கிறது அந்தப் பதிவு.

## ஃப்ளாஷ்பேக்



## கோட்டையில் கொடி ஏற்ற, தலைவரை வாழ்த்தினேன்!



க.சுரேஷ்குமார் என்கிற சீனு

2018-ஆம் ஆண்டு, டிசம்பர் 12-ஆம் தேதி, இன்றைய கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை, அண்ணா அறிவாலயத்தில் சந்தித்து வாழ்த்துப் பெற்ற தருணம். உலகறிய 114 அடி உயர கொடிக் கம்பத்தில் கழக இருவண்ணக் கொடியேற்றிய தலைவர் அவர்களிடம், விரைவில் கோட்டையில் மூவர்ணக் கொடி ஏற்றுவீர்கள் எனக் கூறியபோது, கழகத் தலைவர் புன்முறுவலுடன் பூங்கொத்தினைப் பெற்றுக்கொண்டு வாழ்த்தினார்.

**- க.சுரேஷ்குமார் என்கிற சீனு,**
**மாவட்டத் துணை அமைப்பாளர், அயலக அணி,**
**திருவள்ளூர் கிழக்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### 50 நகராட்சிகளை கைப்பற்றிய கூட்டணி!

1964-ஆம் ஆண்டுக்குப் பின்னர் தமிழ்நாட்டில் நகர்மன்றத் தேர்தல் நடைபெறாமல் இருந்த நிலையில், கலைஞர் ஆட்சிக் காலத்தில் 1969-ஆம் ஆண்டில் நகர்மன்றத் தேர்தல் நடத்தப்பட்டது. 73 நகராட்சிகளுக்கு நடைபெற்ற தேர்தலில், 47 இடங்களில் கழகத்தினரும், முஸ்லிம் லீக் 2 இடத்திலும், சுதந்திரா கட்சி சார்பில் 1 இடத்திலும், மொத்தமாக 50 நகராட்சிகளில் கூட்டணிக் கட்சியினர் தலைவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.